உ

தெய்வமேதுணை.

பதினெண் சித்தர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

வயித்தியக்கண்ணாடி

முதற்பாகம்.

இஃது,

சிலஏட்டுப்பிரதிகளைக்கொண்டும்

கைமுறைகளைவாங்கியும் அச்சுப்பிரதிகளைதிருத்தியும்

சிறுமணவூர்

முனிசாமி முதலியாரால்

இயற்றப்பட்டு,

தமது

சிவகாமிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1908.

49

சிவமயம்.

யோகமுனி
வயித்தியக்கண்ணாடி.

கணேசர்காப்பு.

அத்திமுகத்தவனைப் பணிந்தேத்தியே
சித்தர்நூலைத் திரட்டிக்கண்ணாடிபோல்
வைத்தேன்மானிடர் வாழ்ந்துசுகித்திட
கைத்தொழிலாகும் கண்ணாடியைப்பாருமே.

சீரானவாதமென்னவயித்தியமென்ன செய்முறையோடவிழ் தங்கள்செய்வதென்ன, பாரானபலநூலும் பார்க்கவேணும் பாங் கானசரக்குவகை அறியவேணும், ஆராய்ந்துபுத்தியினால் செய்ய வேணும் அல்லாவிட்டால்குருதொட்டுக்காட்டவேணும், தாரு மாறாய்ச்செய்துசிலமடையரெல்லாம்சாஸ்திரம்பொய்யென்பார்சண் டாளரப்பா. க

பொய்யென்றுசாஸ்திரத்தைச்சொல்வானாகில் புழுவானபாழ் நரகில்வீழ்வான்பாவி,மெய்யென்றுகுருபதத்தைதொண்டுபண்ணி வேதாந்தம்பலநூலும் விரித்துப்பார்த்து, கைமுறையுங்குருமுக மாய்க்கண்டுதேறி கற்றவரைவணங்கியேசொல்லக்கேட்டு, பொய் மறந்துமெய்புகந்துஅறிவிற்கூடி பூரணமேதெய்வமென்றுபோற்றி நித்தம், தப்பவனேமுறையோடேசெய்துபாரு தொட்டதொரு வித்தையெல்லாம்பலிக்கும்பாரே. உ

சுக்குசூரணம்.

பாரேநீவாய்வுக்குகுருட்சங்கேளு பாங்கானசுக்கு சூரணமே செய்து, காரேநீசீனிசர்க்கரையவ்வீதம் கலந்துமேயிருவேளைஎழு நாளும், சேரேநீதின்றுவரவாய்வுதீரும் திறமானதீபனமும்உண் டாமப்பா, ஊரெல்லாமருந்திருக்ககாட்டில்போய்நீ லுத்தரைப் போல்அழியாதேஉண்மைகேளே. ௩

திப்பிலிசூரணம்.

உண்மையென்றதிப்பிலிசூரணமேசெய்து உகமையுடன்தே னிலேகுழைத்துத்தின்ன, வண்மையுடன்புகையிருமல்சேத்மநோ யும்மாறியேபோகுமடாபசியுமுண்டாம், நன்மையுடன்மிளகுசூர ணமேசெய்து நலமானபசுநெய்யும்சீனிகூட்டி, தண்மையுடன்மூ ன்றுநாளாறுவேளை தானறுந்தசளியிருமல்தவறிப்போமே. ச

வெள்ளைக்கு சூரணம்.

ஒன்றாகயின்னமொருசூரணங்கேள் உத்தமனேசந்தனமும்
அகிற்கட்டையேலம்,நன்றாகலவுங்கபட்டைகிறும்புசோம்பு னல்ல
அதிமதுரம்வால்மிளகிஞேடு, சென்றதோர்வெட்பாலைதேற்றான்
வித்து திறமான அருகம்வேர் சிற்றாமுட்டி, பண்பானமாசிக்காய்
மூங்கிலுப்புபகர்வெள்ளைகுங்கிலியம்பலநேர்வாங்கு. ரு

வாங்கியேஉலர்த்திசூரணமேசெய்து வண்மையுடன்யிடைக்
கிடைகற்கண்டுகூட்டி, தேங்காமல்ஒருகடிதான்அந்திசந்தி திண்
ணப்பாபசுவெண்ணைதனிற்கலந்து, ஒங்கியேயோடுகின்றவெள்ளை
தீரும் உத்தமனேநீரெறிப்புவுடனேதீரும், பாங்கானசுட்டபுளிவ
ருத்தவுப்பு பத்தியத்தைக்காப்பாற்றவியாதிபோச்சே. சு

வாய்ரெணத்துக்குகியாழம்.

விளாயெலையும்செம்பருத்திவில்வம்துத்தி வெள்ளைவெங்காய
மொடுகீழாநெல்லி, உளவானவெந்தியமோடேழுஞ்சேர்த்து ஓரள
வாய்நிறுத்துறலில்போட்டிடித்து, அளவாகஜெலம்வார்த்துபாதி
யாக்கி அப்பனைமூன்றுநாளாறுவேளை, தளறாமல்உள்ளுக்கேகொ
ண்டையானல் தங்குமோவாய்ரெணந்தான்பரந்துபோச்சே. எ

பல்லுநோய்க்குபொடி.

பரந்துபோம்பல்நோய்பல்லுக்குத்தல் பல்புழுவுரத்தம்விழல்
இவைகளெல்லாம், எருக்கம்பிலைபழுப்புதனை அரைத்துக்கொண்டு
இரண்டுபுரைகந்தைசுத்திசாணிபூசி, சிருக்கவேபுடம்போட்டுசூர்
ணமாக்கி சிக்கனவேமறுபடியும்யெருக்கம்பாலால், * தருக்கித்து
பில்லைதட்டிஒட்டில்வைத்து தட்டாமல்மூன்றெருவால்புடத்தைப்
போடு. அ

* தருக்கித்து - எருக்கம்பால்விட்டரைத்து.

போடுமூன்றும்புடமும்போட்டுக்கொண்டுபத்திரமாய்அதை
வேரேவைத்துக்கொண்டு,தேடியேமுடக்கத்தான்சமூலத்தோடே
தேரினதாய்கடுக்காவும்சுக்காங்கல்லும்,கூடவேகரிவேலம்பட்டை
துத்தம் கூட்டிஐந்துஒரிடையாய்யிடித்துதூளாய்,ஜாடுவாய்ஜெலம்
வார்த்துமைபோலாட்டு சாந்துபோலானபின்புபில்லைதட்டே. கூ

பில்லைதட்டிவெய்யலிலேஉலர்த்திக்கொண்டு பின்னெடுத்து
ஒருவரட்டியாலேசுட்டு, சொல்லிவைத்தயெருக்கஞ்சூரணத்திஞே
டே சேர்த்திரண்டும்ஒன்றாகக்கலந்துகொண்டு, பல்லுக்குஅந்திசந்
தியெட்டுநாள்தான் பால்மாறுமற்றுலக்கிவந்தையானல்,நொல்லை
யந்தபல்லிலுள்ளநோய்களெல்லாம் துஷ்டனென்றேஉன்னைவிட்டு
ஒடும்பாரே. க0

இதுவும்பல்லுக்கு.

பாப்பாரபுள்ளியெனுங்கண்டங்கத்திரி
பாண்டத்திலிட்டுகறிக்கியெடுத்ததை

இராப்பகல்நித்தந் தூலக்கியேவந்திடில்
இராவணன்போலேமடிந்திடும்உண்மையே.

ஜன்னிக்கி தலைமுழுகும் தயிலம்.

உண்மையாய்ஜன்னியதுபறந்துபோக ஒளியாமல்கைமுறை
யைவெளியாய்சொன்னேன்,பெண்ணேயென்றால்நல்லெண்ணெய்
அரைப்படிக்கி யெதிரிடையாமஃ வேம்பின்சாறுழக்கு, எண்ணி
யேசவுரிபழம்ஒன்றுபோடு யிரண்டுபலங்கஸ்தூரிமஞ்சள்போடு,
பண்ணவேகருஞ்சீரகந்தான்ரெண்டு பலத்தோடேபளிங்குசாம்பி
றாணிகாலு. கஉ

காலுபலம்பளிங்குசாம்றாணிபோட்டுஆறும்ஒன்றாய்க்கலந்து
அடுப்பிலேற்றி, மிஞ்சாமசிறுதணலாயெரிக்கவேணும் முறியாமல்
எளம்பதமாயிரக்கவேணும், வஞ்சியர்மேல்மோகமதைநீக்கிவைத்
து வாரத்துக்கிரண்டுவிசைமுழுகவேணும், கொஞ்சமென்றுபொ
டிபொலைகசாறுயங்கள்ளு குடியாதேபின்னாலேபழித்திடாதே.கங

இதுவும் ஜன்னிக்கி தைலம்.

பழிக்காதேயின்னமொருமுறையைக்கேளுபனைமரத்தின்வேர்
அறுகம்பில்லுவேறுசெழித்த அரைக்கீரையுடவேருங்கூடசேறப்
பாநாணையுடகிழங்குதானும், பழுத்துலர்ந்தமுளகாயும்ரண்டுபோ
டு பளிங்குசாம்றாணிகால்பலமேபோட்டு, வழுத்தினயிவ்வகையெ
ல்லாம்பிடித்துக்கொண்டுவையப்பாஎண்ணெயரப்படியைத்தானே.

அரைப்படிதான்நல்லெண்ணெஅடுப்பிலேற்றி ஆறும்ஒன்றாயி
டித்துஅதிலேபோட்டு,அரைப்பதமாய்தயிலமதுகாயும்போது அ
ப்பனேஎட்டிபழம்ஒன்றுபோடு, பருவமாய்காச்சியதையெறக்கிக்
கொண்டு பண்ணப்பாவாரத்துக்கிரண்டுஸ்தானம், சிரசுநோய்புரு
வநோய்கழுத்துநோயும்சொல்லாமல்போகுமடாகுட்சந்தானே.

இருமலுக்குசூரணம்.

தீருமேஅஸ்தியிலேசூடுகொண்டால் தீராதவறட்சியொடுயி
ளைப்பிறமல், தீருமேபுகைச்சலொடுதொண்டைக்கம்மல் சிலுக்
கிருமல்ராக்கூரல்வரட்சிகோழை, கூறுமேநாவரட்சி மூலச்சூடு
கூரியபித்தமொடுகனமேகங்கள், ஆறுமேயிவையெல்லாம்ஓடிப்
போக ஆடாதோடைகோஷ்டந்திப்பிலியே. கரு

திப்பிலியும்வசம்போடுநெல்லிமுள்ளி சிறுகடுக்காய்வழுதலை
வேர்முடக்கத்தானும், நாகப்பூவல்லாரைமிளகுசுக்கு நாலெட்டும்
பலம்நாலாய்சேர்த்திடித்து,ஒப்பியேநாளொன்றுக்கந்திசந்தி ஒரு
கடியாய்த்தூளெடுத்துவிளம்பக்கேளு, செப்பரியபசும்நெய்யில்கு
ழைத்துஉண்ண செப்பியதோர்நோய்களெல்லாஞ்சஞ்சீவிதானே.

சஞ்சீவியெண்ணெ.

சஞ்சீவியிஞ்சிச்சார்படிதானென்று தனியானநல்லெண்ணெய்ப் படிதானென்று, சஞ்சீவிஆவின்பால்படிதானென்று சாறிடித்து மெழுகுபதமாகக்காச்சி, சஞ்சீவியாகவேவடித்துவாங்கு மாறாமல் முழுகிவரசூலைவாய்வு, அஞ்சியேகபாலநோய்மண்டைகுத்துஅடர் சன்னிகிறுகிறுப்புமயக்கம்போமே. கஅ

கருஞ்செம்பைத்தயிலம்.

போடுமென்றமேகவகையெல்லாம்தீரப் புகலுகிறேன்தயில மொன்றுபுத்திளுட்டு, ஆமென்றகருஞ்செம்பையிடித்துசாறு ஆவின்பால்விட்டதிலேபிசைந்துநன்றாய், நாமென்றபடியொன்றுபிழிந்துக்கொண்டு நல்லெண்ணெ ஒருபடிதானதிலேவார்த்து, ஆமென்று அடுப்பேற்றி எறித்துக்காச்சி அப்பனேமெழுகுபதம்வடித்திடாயே. கக

வடித்துமேநாலுநாள்மட்டும்மூழ்கு மகத்தானமேகவகைகுடுகாந்தி, நடுக்கின்றஅஸ்திசுரம்அஸ்திவெட்டை நாடாதுகண்ணெரிவுகாந்தல்தீரும், திடத்தழுருபதேகமதுசவுக்யமாம்பார் செப்புர்கள்வைத்தியர்கள்உலகிலமைந்தா, படித்திட்டமதுராதிசந்தனுதிபரிவானமேகாதியிதுக்கொவ்வாதே. உ௦

பூவரசன்பேதி.

உண்ணுநீபுரசைவித்துஆவின்பாலில்உறுதியுடன்அரைத்துண்ணபேதியாகும், நண்ணுமடாநோயெல்லாந்தீருந்திரேகம்சவுக்கியமாம்சண்டாளக்கிறிமிதானும், நண்ணுகின்றகிறிமிசாகயின்னமொன்று நவில்கொன்றைமரத்துடையகொழுந்துவாங்கி, வண்ணமுடனுப்பிலாதவிழ்த்தேயுண்ண மற்றுநாள்கூண்டோடேவீழும்பாரே.

கிறிமி நாக்குப்பூச்சி துவரைபேதி.

வீழுமடாதுவரையுடபேதிகேளு மிதமாகநற்றுவரை வேகவைத்து, ஆழுமந்ததுவரைநீக்கிஜெலத்தைவாங்கி அப்பனேகருப்புவெல்லமதிலேபோட்டு, சூழுமந்ததுவரைதான்வெல்லநீரைசோறுமலுண்டிவரபேதியாகும், தாழுகின்றதுவரையிலேமிளகுபோட்டு தண்ணீர்போல்காச்சிபகல்சாதமுண்ணே. உஉ

தூதுவளைலேகியம்.

பூரணமாமின்னமொருலேகியங்கேள் புலத்தியனேமானிடர்கள் பிழைக்கவென்று, காரணமாமுறங்கைப்பூதூதளம்பூ கணக்காகவகைக்குக்கால்பலம்நிறுத்து, தாரணியில்*சதாவேரிக்கிழங்கு மூணு தருவானநன்னார்வேர்பலமிரண்டு, காரணமாகிலப்பனையும் நெரிஞ்சிமுள்ளும் கண்மணியேவகைக்குஒருபலமாய்க்கூட்டு. உங

* சதாவேரி தண்ணிவிட்டான்கிழங்கு.

கூட்டியேசூரணித்துபசுவின்பால்தான் குறுணியிலேபோட்டு
மேகுழம்புபோலே, * தாட்டியேலேகியம்போல் கிளரும்போது
தட்டாமல்சீனிபத்துபலமேபோடு, வாட்டமாய்கிளரயிலே பசுவி
நெய்தான்வாறு அரைப்படியுடனேதேனுக்கு,கெட்டியாய்லேகிய
ம்போல்பதமாய்க்கிண்டி கருத்தினால்கடவுளைநீதியானம்செய்யே.

* தாட்டியே அடுப்பில்வைத்து.

செய்துமேபுன்னைக்காயளவுகொள்ள தீருகிறவியாதிதனைதிற
மாய்க்சேளு, எய்துகின்றபிரமியமும்மேகநோயும் பொல்லாதவெ
லும்புருக்கிபிரமேகந்தான், பெய்துமேமண்டலத்தில்தீருங்காலில்
பலமுண்டாம்யிந்திரியலாபமுண்டாம், செய்தயிந்தலேகியத்தில்மே
கமெல்லாம் தீருமடாபத்தியமோயில்லைபாரே. உரு

பீநிசத்துக்குபுகை,

திரியென்னபூவரசன்வெள்ளெருக்கன்வேறும் திரமானமலை
த்தாங்கிகஸ்தூரிமஞ்சள்,உரமானசிறுநாகம்சீரகமும்சேர்த்துஉத்
தமனேபுகையிலைச்சாற்றிலாட்டி,கிரமாகசீலையிலேபுரட்டிக்கொண்
டு தீயிலேவத்திதனைகொளுத்திக்கொண்டு, வருகின்றபுகையெல்
லாம்மூக்கிலேற்ற வாடுமடாசன்னியெல்லாந்தணியுங்கேளே. உசு

கபாலசூலைக்கி சவுரித்தயிலம்.

கேளப்பாசவுரிபழம்சாறுழக்கு கிறுவையுடன்பொடுதலையி
ன்சாறுழக்கு,கேளப்பாபசுவினிடபாலொழக்குயெள்ளெண்ணை
உழக்குபலம்மிளகுசேர்த்து, தாளப்பாகலக்கியதை மெழுகுபோ
லே தான்காச்சிதயிலமதைமுழுகும்போது, கேளப்பாஒன்றுமில்
லைமிளகுநீரும் கூட்டியேசாதமுண்ணும்போகம்நீக்கு. உஎ

நீக்கவேதீருகிறவியாதிகேளு நிலையானகபாலவலிமண்டைக்
குத்து, போகுமேபீநிசங்கள்மண்டைசூலை பொல்லாதநேத்திரத்
தின்மாசிதீரும், வாங்குமேநீர்கடுப்புமேகச்சூலை வாங்குமடாதை
லமதுவாரந்தோறுந், தாக்குமேதவறுமலமூழ்கிவாநீ தணியாத
நோய்களெல்லாம்தவரிப்போமே. உஅ

அமுக்கிறுவேர் சூரணம்.

கண்டிடாஅமுக்கராசூரணத்தை கருதவேபலம்பத்துநிறுத்
துக்கொண்டு, வண்மையாய்வஸ்தரகாயம்செய்துக்கொண்டு வால்
மிளகுகோரோசனையும்பறங்கிப்பட்டை, கண்டிடாகருஞ்சீரகம்கடு
க்காய்சுக்கு கடுகுரோகிணிதிப்பிலிமுடக்கத்தானும், விண்டிடாய்

வகைவகைக்குபலமேதூக்கு இடித்ததனைமுன்மருந்தில்சமனாய்ச்சேரே. ௨௯

சமனாகசீனிசக்கரைபலந்தானைந்து சாதித்துவொருகடிதான் அந்திசந்தி, அமனாகஆவின்னெய்சேர்த்துக்கொள்ளு அரையாப்பு மேகவெடிகிரந்திகுஷ்டம், யெமனாகவாய்வோடுகடிவிஷங்கள் பெலிகடியும்சிலவிஷங்கள்பூரான்செய்யான், சமனாகமேகமொடுவாத பித்தம்கழன்றுப்போம்பத்தியந்தான்கண்டுகொள்ளே. ௩௦

கொள்ளுவதுகசப்போடு புளிப்புந்தள்ளி கொள்ளவேமற்றதெல்லாம்யிச்சாபத்தியம்,தள்ளாதேஅப்பாகேள்வின்னமொன்று சாற்றுவேன்லேகியந்தான்சகலநோய்க்கும்,கொள்ளவேஆடாதோடைசமூலந்தன்னை குணமாகநிழலுலர்த்திசூரணமேசெய்து, விள்ளாதேபலம்பத்துநிறுத்துக்கொண்டு மிளகோடுகொத்தமல்லிதிப்பிலியுஞ்சுக்கே. ௩௧

ஆடாதோடை லேகியம்.

சுக்கானஅதிமதுரம்தாளிசப்பத்திரி சுகமானயிந்துப்புதும்பராஷ்டங்கோஷ்டம், நைக்கவே * இருசீரகமுங்கடுநாகப்பு அதிவிடையம்கிறும்புதேக்கு, எய்க்கவேவகைக்குஒரு பலமாய்தூக்கியிடித்துசொன்னசரக்கெல்லாம்ஒன்றாய்ச்சேர்த்து, ஐக்கதேசீனிசக்கரைநாலாம்பங்கு ஆவினெய்யும்தேனதிலேயருந்தக்கேளே.

* இருசீரகம் - சீரகம் - கருஞ்சீரகம்.

இருந்தவேலேகியம்போல்பண்ணிக்கொண்டு அந்திசந்திகொட்டைப்பாக்களவுகொள்ளு, அருந்தவேசயமீளைமந்தகாசம்அஸ்திசுரம்பித்தமொடுவாய்வுகாந்தி, அருந்தகுத்திருமல்சிணுக்கிருமல் புகச்சல் ஆகாதபலபிணிகள்அணுகாதப்பா, கருதவேபத்தியந்தானிச்சாபத்தியம் கைப்போடுபுளிப்புகொண்டுந்தவிர்த்திடாயே.

கடுக்காய்லேகியம்.

வாகானகடுக்காயின்லேகியத்தை வளமாகச்சொல்லுறேன்மக்காள்கேளும், பாரானகடுக்காய்தான்கொட்டைபோக்கிபலம்பத்துசிவதைவேர்பலந்தான்ரெண்டு, வாறானகரிசாலைபலந்தானரெண்டு வல்லாரைபுளிப்பாவகைக்குரெண்டு, காரானநிலையாவாரைபலந்தான்ரெண்டுகருதியேயிடித்தொன்றாய்ச்சூரணமேசெய்து,சீரானகடுகுரோகணிகிறும்பு திப்பிலிசிறுநாகப்பூவோடுவாலுவைசிங்கி.

சிங்கியொடுகஞ்சுசீரக மிளகுதாணி சிறப்பானகொத்தமல்லிதாளிசப்பத்திரியும், இஞ்சியேவகைவகைக்குகால்பலமேதூக்கி யிடித்துமேவடிகொண்டுமுன்மருந்திற்சேரு,தாங்கியேயாவின்நெய்தேனும்விட்டு சக்கரையும்போட்டுநீலேகியமாய்ப்பண்ணே. ௩௫

பண்ணியேநாளொன்றுக்கந்திசந்தி பருங்கொட்டைப்பாக்க ளவுகொள்ளுகொள்ளு, திண்ணியேதீரும்நோய் சொல்லக்கேளு செலக்கட்டுமலக்கட்டுகோழைக்கட்டு, உண்ணவேஉஷ்ணவாய்வு மேககாந்தி உள்ளங்கால்கையெரிவுகுலையெரிவுபிரட்டல், எண்ண வேமூலத்தில்சூடுகாந்தி யிளைப்பிருமல்புகைச்சலொடுவரட்சிசோ கைதீரும், எண்ணியேபத்தியமாய்உண்டுதேறு இதைவிட்டால் கற்பம்வேறுண்டோசொல்லே. ௩௭

இஞ்சிலேகியம்.

சொல்லவேஇஞ்சிலேகியத்தைக்கேளு தோல்போக்கிபலம்ப த்துநிறுத்துக்கொண்டு.மல்லவேபழச்சாற்றாலாட்டிமைபோல் மை ந்தனைசட்டிலேயிட்டுக்கேளு. அல்லவேசீரகமுமிளகோடேலம் அ திமதுரந்திப்பிலியுங்கோஷ்டமூலம், கல்லவேவாலுழுவைதாளிசப த்திரியும் கடுகோடுகொத்தமல்லிசித்திரமூலம், அல்லவேசிங்கியொ டுகுருசானியோமம் அப்பனைவகைக்குஅரைப்பலமேதூக்கே.()

தூக்கியேகரிசாலைபூலாவும்பழச்சாற்றால் துவளரைத்துமுன் மருந்தோடொக்கச்சேரு,ஊக்கமாம்பிரண்டையதுமோரிலுப்பிட் டு உலர்த்திடித்துஒருபலம்போடுபோடு, ஆக்கவேவங்காளச்சீனி யப்பா அதில்பாதிபோட்டாவினெய்யைவாரே. ௩௮

நெய்வார்த்துலேகியம்போல்பண்ணிக்கொண்டு நேரமொரு பாக்களவு அந்திசந்திகொள்ளு, பொய்யல்லபித்தவாய்வுஉஷ்ணகா ந்தி பிரட்டல்தாதுவலிகுன்மம்பித்தகுன்மம், மெய்யானஅத்திசு ரம்சன்னிதோஷம் வீரானஎரிகுன்மம்அஜீர்ணவாய்வு, செய்யவே வுப்புஷமும்அரோசிகமுந்தீரும் தீபமாம்பதியரிந்துசீராய்க்கொ ள்ளே. ௩௯

உ

சிவமயம்.

சகலரோகத்திற்கும்

மேகராஜாங்கத்துயெண்ணெய்.

தொண்டிச்சிந்து

சித்தாமணக்கெண்ணை மூன்று படியொருபாண்டத்தில் அளந்துவிட்டு செப்பிடும் சார்வகைகேள்- சூரிய-காந்தியின் சார் பொடுதலைச்சாறும்மாதளம் யிலைச்சாறும்-தேள்-கொடுக்கிலைசாற்றுடன் தும்பைச்சாறுஈரவெங்காயசாறும்தூது-வேளையின்சார்பழம்பாசிச்சாறு பீச்சங்கன்சாறுடனேகீழ்-நெல்லியின்சார்கோவ்யிலைச்சாறும் மலைவேம்பிடச்சாறுகுப்பை-மேனியின்சார் முருங்கிலைச்சாறுமுடக்கத்தானிலைச்சாறும் நீர் முள்ளிசாருடன் காட்டாமணக்குச்சாறும் கரிச்சாலைச்சாறுடனேபேய் தும்மட்டிக்காய்ச்சார் கத்தாழைச்சார்வில்வயிலைச்சாறு கழுதை லத்தியின் சார் முதல்சொன்னதெல்லாம் வகைக்கரைப்படியெடுத்து ஒன்ருய் வாருசித்தாமணக்கெண்ணையிலே வார்த்தபின் அதையெடுத்து வெய்யலில் வைத்துவிட்டு கேளினிவெட்டுமருந்து தந்தினத்தனதனனம் தனம் தந்தினதந்தினதனதனனம். க

வெட்டுமருந்துவகை அதில் கலந்திடவேணுமிதை விளம்பிடக்கேள் முருங்கையின்மரத்துப்பட்டை பூவரசம்பட்டை வில்வப்பட்டை நொச்சிபட்டையுடனே ஆலன்மரத்துப்பட்டை காட்டு அத்திப்பட்டைகருவேலம்பட்டையுடனே புங்கம்மரத்துப்பட்டை எட்டி பட்டையுடன்சித்தாமுட்டிபேராமுட்டிகத்தாழைசேர்த்துடனே கருமுள்ளி செங்கத்தாழை சிவன்வேம்பு செம்முள்ளி நிலக்கம்பு முக்காவேளையுடன்துத்தியிலை நிலாவரையும் அமுக்குருவேருடனே சித்திரைமூலம்முசுமுசுக்கைகுப்பைமேனியும் பூமிசக்கரைக்கிழங்கு பட்டையுடன் நாயுருவிமுளகரணை ஆகாசத்தாமரையும் வேப்பம்பட்டையொடுசெம்பரித்திநிலப்பனைவேர் ஆலம்விழுதுமுனை வெள்ளையெருக்கம்வேர் துளசிவேர் வேப்பின்வேர் இவையொருவகைவகைக்கும் அஞ்சிபலம் விழுக்காடு நிறுத்துநீ உரலிலிட்டுயிடிரெண்டுநாள்முழுதும்உன்னுல் ஆனமட்டும்பெருந்தூளாயிடித்தெடுத்து எட்டுபடி ஜெலத்துக்குள்ளே இந்த தூள் முழுதுங்கொட்டி ஒருஅடுப்பேற்றி புளியம்விரகுதள்ளி மற்ற யெந்த விறகானுலும் பூயரிந்திநீ ஆவியை போக்காதே அதை அடிக்கடிதிறக்காதே யெறக்காதேஆறுபடிதண்ணியும்வற்றி அதில்ரெண்டுபடி யிருக்கையில் யெறக்கி

கொள்ளு தெளிவாயிறுத்துக்கொள்ளு முன்னே ராறுவகைவை த்திருக்கும் பாண்டத்திலேபசுவின் கோமியமும் ஒருபடி-வார்த் துநீ கிண்ணியொருபுறமாகவைத்துவிட்டு கேளினீ கடைசரக் குகளுரைக்கிறேனதற்கேதான் தந்தினத் தனதனனம்தனம். உ

கடைசரக்குகள்வாங்கு யேலம் கிரும்பதிமதுரம் திப்பிலி யும் வோமம்பெருங்காயம் ஜாதிக் காயுடன்கடுக்காய் சீரகமும் கருஞ்சீரகமுடனே கஸ்தூரி மஞ்சளதி விடயம்லவுங்கமுடன் தாளிசப்பத்திரியும் வெத்திலேக்காய்சிறுதேக்குசுக்கு வசம்புட னே கடுகுரோகணிகொம்பு ஆனைத்திப்பிலிக்கல்லுரையுடன்கொ த்தமிலியும் சூரத்துக்கடுக்காயும் அக்ரா காரமொடு சடாமாஞ்சி வலம்புரிக்காய் தண்ணிவிட்டான் கிழங்குவெள்ளெருக்கஞ்செடி யின்வேர் அடிக்கிழங்கு காட்டுக்கருணைக்கிழங்கு நல்ல கெருட ணிடக்கிழங்கு தேவிக்கிழங்கு தேற்றுங்கொட்டையுடனே கோ ஷ்டம் செம்முருங்கைப்பூ வெருக்கம்பூவுடனே முருங்கையின் மரத்துப்பூவும் புங்கம்பூவரசம்பூவும் மாதளம்பூவும் செகப்புச ப்பாத்திப்பூவும் நல்ல செண்பகப்பூவுடன் தும்பைப்பூவும் ஆ வாரம்பூவுடனே நல்ல அகிற்கட்டை சந்தனமும் கசகசாவும் சுத்திசெய்தநேர்வாளம் கால்பலம் ஷை சொல்லிவந்ததினுசுகள் வகைவகைக்கும் ஒவ்வொருபலம்வாங்கி அதை ஒன்றாகப்போட் டிடித்து மையதுபோலவஸ்திரகாயம்செய்து புங்கம்பாலைவிட்டு சாந்துபோலரைத்துக்கொள்ளு அரைத்தபின்னிதையெடுத்துமு ன்னே யெண்ணைமுதல்சாறுவகை கியாழமெல்லாம் ஒன்றாகவார் த்திருக்கும் பாண்டத்தில் அரைத்திட்டமருந்தையுமதில்போட் டுயெடுத்துவை யடுப்புமீதில் கொஞ்சம் சிறுதணலாகவே எரித் திடுநீ யிரண்டரைநாழிவரைக்கும் அதைகிளரிக்கொண்டேயிரு அடிக்கடிநீ யேமாந்திருக்காதே மருந்துகள்யெல்லாம் ஒன்றாய் கலந்து மெழுகதுபோல் இருக்கிறபதம்பார்த்து அப்போயிரண் டுவராகனிடைகஸ்தூரியும் பச்சைகற்பூரமப்பா !இதுவும்யெடுத் துக்கொள்ளிரண்டுவராகனிடையே இரண்டையும் பொடித்துக் கொண்டுகாய்கிற யெண்ணையிலேபோட்டுகலந்திரக்கிடுநீ தந்தின தனதனனம். ௩

உள்ளுக்குயெண்ணைகுடிக்க முறைகளை உறைக்கிறேன்சா ஸ்திரவிதிப்படியே முதல்நாள்தலைமுழுகு அன்று மிளகுநீர் கூட்டிக்கொண்டுபொசிப்பெடுநீ இரண்டாநாளொருபேதி நாலு ஐந்து விசையாகும்படி வாங்கிக்கொண்டுமூன்றுநாள்காலையிலும் முருங்கை அவரைபிஞ்சுபொரித்து உண்ணு நாலானால் காலையி லே மேகயெண்ணை நெய்கரண்டிரெண்டளந்து குடித்துவிடு ஆ காதுபுளிகாரம் உப்புகூடக் கூடாதுவெந்நீரும் சாதம்உண்ணு ஏழுநாள்குடிக்கவேணும் அப்பா-யென்னுணை உப்புபுளி காரமி

தெல்லாம் சேர்க்காமல் ஜாக்ரதையாய் எண்ணெய் தனை சிறுகக்குடித்திடுதோறுமலே எட்டுநாள்காலையிலே மருந்தெண்ணெய் குடிக்காதே அன்றிரவும்பகல்முழுதும் தின்னவேணும் தண்ணியுஞ்சாதம்அப்பா தெரிந்துக்கொள்ளிதுவேமுறைப்படி ஒன்பதா நாட்காலையும் அரைத்துக்கொண்டொருதலைமுழுகிவிடுஎன்மேல்பழியே து மறுமம்யெடுத்துவிட்டேன் வெளியாயுரைத்துவிட்டேன் முறைப்படி குடித்தவற்கு கெட்டமுகஜன்னிசுகஜன்னிஜுரமேது அஸ்திசுரங்களேது அந்த ஆகாதகுலைநோய்தலைநோயும்பித்தயெரிச்சலேது அந்தபோகாத வெள்ளைகொறுக்கதுவேது மேகரணங்களேது உடல்மேல்வரும் படைசொறிசிறங்கேது ஒருதலைநோயேது புறங்கழுத்துடன் கைகால் ஒய்வேது சோம்பல் திமிரேது வாய்வொடுகாமாலை சோகைவிஷங்கடியேதுவயற்றில்கிறிமியேது அபானவாய்கடுப்பேது மூலச்சூடேது பரந்திடும்நோய்களெல்லாமிந்தப்பாருக்கென்றேயோகமுனியுரைத்தேன் பொய்யருக்குரைக்காதே சுத்த புத்தியில்லாமக்களுக்குகொடுக்காதேபாவிகட்குக்காட்டாதே தன்னுயிர்போலே பாராதகசடற்கு நீட்டாதே நம்பினால்தடுக்காதேநல்லஞானிகட்கும்யோகிகட்கும் மறைக்காதே தந்தின்தனதனம்.

வசனம்.

இந்த யெண்ணெ சொல்லிவந்த முறைப்பிரகாரம் காச்சி மூறுநாள் திறக்காமலே வைத்திருந்து அதன்பிறகு யெடுத்து மேலோடயிருத்துவேரே வைத்துக்கொண்டு அடியில் நின்றிருக்கும் பந்தனையை வேறேயெடுத்து யெள்ளெண்ணெயைவிட்டு குழம்பாகக்கலந்துக்கொண்டு சொரிசிரங்கு படை மேகச்சூடு உள்ளவர்களுக்கும் இன்னம் குழந்தைகளுக்கும் கண்ணுக்கு காட்டாமல் சிரசுமுதல் கால்வரையில் திரேகமெல்லாம்பூசி நாலுஜாமம் ஊறவைத்து வாரத்துக்கிரண்டுவிசை ஸ்தானம்செய்வித்தால்மேகச்சூடு காந்தி கண்ணெரிச்சலெல்லாந்தீரும்.

கொருக்குக்குமேல்பூசுமருந்து.

லிங்கம் பூரம் முதார்சிங்கு இந்தமூன்றும் தினுசுக்குக்கால்பலம் விதமாய்கொண்டுவந்து ஒன்றாய்மைபோல் பொடிசெய்து கொண்டு படிகாரத்தை நெருப்பில்வைத்து பொங்கிதாணய்பூர்த்தபின் எடுத்துபொடியாய் நசிக்கிக்கொண்டு முன்செய்த பொடி எவ்வளவிருக்குதோ அதில் அரைப்பங்கு படிகாரத்தூளைப்போட்டுக்கலந்து பசுவெண்ணெயில்கலந்து மெழுகுபோல்குழைத்து டப்பியிலாவது கரண்டியிலாவது வழித்துவைத்துக்கொண்டு கடுக்காய் காசிக்கட்டியும் யிடித்துத் தண்ணீர்காச்சிரெணத்தைக்கழுவி துணியால் துடைத்துப்போட்டு யிந்த மலானைத்தடவினால் மூன்றுநாளையில் ஆறி உலர்ந்துபோகும் யிந்த மலானையே ஆணச்சிரங்குக்குந் தடவலாம்.

மூலத்துக்கு.

காருக்கறணை கொண்டுவந்து பில்லையாக அறுத்து வெய்யலில் உலர்த்தி பாலில் கொதிக்கவைத்து வ-படிபாலுக்கு கால்பலம் மொளகுத்தூள் தூவி பிரதி தினமும் காலையில் சாப்பிட்டுவர நவமூலமும்போகும். ௭

தூதுவேளைகிருதம்.

தூதுவேளைசமூலங் கொண்டுவந்துயிடித்து வஸ்திரகாயம் செய்து அதற்குமூன்றில் ஒருபங்கு சீனிச்சர்க்கரைசேர்த்து அந்திசந்தி ஒருகடி சாப்பிட்டுவர மேகம் உக-ம் தீரும் வாய்வுந் தீரும்.

பித்தத்திற்கு கியாழம்.

மிளகு திப்பிலி சுக்கு நாயுருவி மயிலிரகு பட்டுக்கந்தைஇதுகளை ஒன்ரு இடித்துப்போட்டு அறைபடி ஜெலம்வைத்துகால்படியாகயிரக்கி காலை மாலை குடித்தால் நாக்கில்தண்ணீர்சுரப்பு பித்தவரட்சி நாக்குதுவளல் தண்ணிதாகம் இதுகள்தீரும். ௯

தேங்காய் அறப்பு.

நோயேதுசிரங்கு சொரிகரப்பானேது
நலமெண்ணுவரையாப்பு புண்புகைகளேது
நோயேது இன்னமொரு செய்திகேளு
நுணுக்கமாய்தேங்காயைக் கருகச்சுட்டு
நோயேது அதிற்பாதி மிளகுஞ்சேர்த்து
நோக்கமாயரைத்ததனை வழித்துக்கொண்டு
நோயேது மேலெங்கும் பூசுபூசு
நேர்மையுடன் சாயரட்சை வெந்நீர்வாரே. ௧௦

தேங்காய்ப்பால்.

வார்த்துமே மூன்றுநாள் குளித்துப்பாரு
வாராது சிறங்குசொறி கரப்பான்போகும்
வார்த்துமே யின்னமொரு சூக்ஷங்கேளு
வளமான தேங்காய்ப்பால் படிதான்ரண்டு
வார்த்துமே சட்டியிலிட் டடுப்பிலேற்றி
வகையான கல்லுப்பு மஞ்சள்ரண்டு
சேர்த்துமே கரிஞ்சீர கத்திநேடு
திரமாக வகைக்குக்கால் பலந்தான்சேரே. ௧௧

சேரப்பா சமனாகமும் மருந்துந்
திறமாகப் பொடித்தந்த பாலிற்றாவி
நேரப்பா வடுப்பேற்றிக் காய்ச்சுகாய்ச்சு
நிகரான பதமாக எண்ணெவாங்கு
ஆரப்பா யிவ்விதமாய் மருந்துசொல்வார்
அவனியிலே யுண்டோதான் கண்டாற்சொல்லு
தேரப்பா என்மருந்தே நன்மருந்து
தெளிவாகச் சொன்னேன்காண் சிறப்பாய்த்தானே. ௧௨

மாம்பட்டை.

தானேதான் வாங்கியதை யுடம்பிற்றேய்த்துத்
தனியான மாம்பட்டை தனையிடித்துக்
கோனேநீ குறிணிநீர் தனிற்குழைத்துக்
குணமாக மேற்பூசிச் சாயரட்சை
வானேநீ யிப்படியே மூன்றுநாள்தான்
வளமாகக்குளித்து வரச்சொறி சிரங்கு
தேனேதான் கரப்பானுந் தீருங்கேளு
செயலான புளியிலையாவாரை வேரே. ௧௩

வேரான திரண்டுபங்கு மிளகு வொன்று
விருதானகரிய சீரமுங் கூட
ஆரான வசம்புசுட்டுக் கூட்டுகூட்டு
ஆடுதொடா மூலிச்சார் விட்டேயாட்டு
பேரான கராபோகி வித்துங்கூட்டு
பெரியாறைச் சாற்றிலே கொஞ்சம்வாரு
ஏரான திவையெல்லா மறைத்தொன்றாக
எள்ளென்ற நல்லெண்ணெய் தன்னிற்போடே. ௧௪

போட்டுமே ரவிபுடமாய் வைத்துக்கொண்டு
பூசியே மேலெங்குந் திவலையாக
ஆட்டுமே சாயரட்சை யரைப்புப்போட்டு
அப்பனே மூன்றுநாள் குளிக்கக்கேளு
வாட்டுமே சிரங்குசொறி கரப்பான்புண்கள்
மாறும் அரிகரப்பான் சொரிகரப்பான்
மீட்டுமே வெடிசூலை யறையாப்புப்புண்
விஷக்கடிநோய் நாடாம லோடுந்தானே. ௧௫

சுரங்களுக்கு ஜன்னிக்கு மாத்திரை.

போமென்றே சருவனே யெல்லாந்தீரப்
 புகலுகிறே னனந்த மாத்திரைதான்
தாமென்ற திரிகடுகு தாரம்இந்து
 தனியான வாளமொடு நாவிலிங்கம்
வேமென்ற சமனெடைதான் கல்வத்திட்டு
 வெள்ளுள்ளித்தயில முடனிஞ்சிச்சாறும்
ஆமென்ற ஏழுநாள் மயனம்போலே
 ஆட்டியே குன்றியள வுண்டைசெய்யே. ௨௬

*இந்து-இந்துப்பு * தாரம்-அரிதாரம்.

* வெள்ளுள்ளி-வெள்ளைப்பூண்டு.

செய்தவுண்டை நிழலுலர்த்திச் செப்பிலிட்டுச்
 சிறப்பான நெற்புடத்திலிட்டு வாங்கு
தொய்தமுள்ள விஞ்சிச்சார் தேனிலூட்டு
 தொலையாத ஜன்னிபதின் மூன்றுமோடும்
மெய்தனூறு மூவேழு தோஷமெங்கே
 முனையான பதினெட்டுச் சுரமுமெங்கே
ஐதவண்ட வாதமெண் பதுவுமெங்கே
 அதில்பிறந்த நோயெல்லா மெங்கேபோச்சே. ௨௭

பெரும்பாண்டுக்கு

பேரமென்ற பெரும்பாண்டுக் கின்னங்கேளு
 புகலுகிறேன் வெகுசுருக்குச் சூட்சமாகத்
தேமென்ற சுட்டசெங்கல் சிவந்ததாக
 சிறப்பாக எடுத்துவந் திடித்துநன்றாய்
ஆமென்ற வேழுதரம் வடித்துக்கட்டி
 யதிற்பாதி வங்காளச் சீனிசேர்த்து
வீமென்ற நாளொன்றுக் கந்திசந்தி
 வெருகடித்து வேழுநாள் கொள்ளுகொள்ளே. ௨௮

சுட்டசெங்கல்யென்றால் சிட்டங்கட்டிய கல்லையெடுத்து குளத்தில்போட்டு மிதக்கினால்அந்தகல்லை வஸ்திரகாயஞ்செய்து சீனிசேர்த்துக்கொடுத்தால் சகலநோயும்கேழ்க்கும் நூறுவருஷத்தியசிட்டக்கல்லும் உதவும் அல்லது மலைகளிலும் அகப்படும்.

கலிக்கம்

கொள்ளவே பெரும்பாண்டோடெல்லாம்தீரும்
 குடிகெடுத்தபுளிபுரையும் பெண்ணுந்தள்ளு

மெள்ள வகைகண்டவித்தைசொன்னேன்
வீருகவின்னமொரு கலிக்கங்கேளு
விள்ளவேபெருங்காயந்திப்பிலி மிளகு
வெள்ளுள்ளி கிரும்புமுதலேந்துநேராய்
அள்ளவே வெற்றிலேச்சார்மேனிச்சாறு
அடல்வெள்ளேச்சாரணேச்சாறதுவூமட்டே. ௨0

ஊட்டியே சாருன்றிற் சாமமொன்று
உற்பனமாயரைத்துநன்ருயுண்டை கட்டி
மாட்டியே நிழலுலர்த்திச் சந்நிதோஷம்
மாறவே தும்பைச்சார் வெற்றிலேச்சார்
வாட்டியே யிஞ்சிச்சார் மேனிச்சாறு
வாகான பழச்சாறு முலேப்பாலோடு
கூட்டியேய ஞ்சனத்தைத் தீட்டிப்பாரு
குடிகெடுத்தஜன்னியது குடியேபோச்சு.

பித்தவாயுக்குபழம்.

காணுத பித்தவகை வாயுக் கெல்லாம்
காட்டுகிறேன் சூக்ஷாதிசூக்ஷமாகப்
பூணுத திரிகடுகு ஓமங் காயம்
பொடி செய்து நிம்பழந்தா னுலுகிற்ருய்
பாணுது பொடியைந்தி னுள்ளேவிட்டு
பனியில்வைத்து காலேயிலே சப்பியுண்ணு
கோணுமல் நாள்மூன்று கொண்டுதேறு
குலேத்தோடும் பித்தவாயு உஷ்ணவாய்வே. ௨௨

நிம்பழம் எலுமிச்சம்பழம்.

வாய்வோடுகிறுகிறுப்பு மயக்கந்தூக்கம்
மந்தமாஞ்செரியாமை நெஞ்செரிப்பு
வாய்வோடு அக்னிமந்தம் அன்னத்தோஷம்
வாய்க்கசப்பு நீரூறல் வெள்ளோக்காளம்
வாய்வோடு விவையெல்லாம் காணுதோடும்
மைந்தனே கொண்டதின் மேலொருதேசி
வாய்வென்று நாள்மூன்று மறவாதுண்ணு
வாகான பித்தமெல்லா மாண்டுபோமே. ௨௩

இதுவும் எலுமிச்சம்பழம்.

ஊன்டுபோ மின்னமிதிற் சூக்ஷமொன்று
மைந்தனே நிம்பழந்தா னுலுகீற்றாய்
ஊன்றியே கீறியதி லெருக்கம்பாலை
பூட்டியே தலைமாட்டில் வைத்துத்தூங்கு
வேண்டியே யுதையாதி யெழுந்திருந்து
விரும்பியே நிம்பழத்தையுண்ணவ்வண்ணம்
வேண்டியே மூன்றுநா ளருந்த்வாயு
வீறிட்டு வோடிவிடு மெய்சொன்னோமே.

முதற்பாகம் முற்றிற்று.

இதில் அடங்கியிருக்கும் மருந்துகளின் அட்டவணை.

உ

தெய்வமேதுணை.

பதினெண்சித்தர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

வயித்தியக்கண்ணாடி

இரண்டாம்பாகம்.

இஃது,

சிறுமணவூர்

முனிசாமி முதலியாரால்

இயற்றப்பட்டு,

தமது

சென்னை சூளை

சிவகாமிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1908.

நூதன புத்தக விளம்பரம்.

சுதேச கைத்தொழில் சாஸ்திரம், விலை ரூபா	**1**	**0**	**0**
சுகந்த பரிமள சாஸ்திரம்	0	8	0
சிவசொரூபசாஸ்திரம்	0	8	0
சரீரசாஸ்திரம்	0	8	0
விவாக சாஸ்திரம்	0	8	0
சகுனசாஸ்திரம்	0	4	0
ருதுஜெனனசாஸ்திரம்	0	4	0
நஷ்டஜாதகம்	0	8	0
நவகண்ட ஆரூடம்	0	8	0
பதிவிரதைகள் சரித்திரம்	0	12	0
உலகவிசித்திரக்கதை	1	0	0
இங்கிலீஷ் தமிழ் வைத்திய சிகாமணி	3	0	0
பிரபஞ்ச உற்பத்தி	2	0	0
சண்டாளர் சகவாசம்	0	8	0
வேதாந்த ஜட்ஜ்மெண்ட்	1	0	0
குடும்ப சனியனென்னும் அகடவிகட சம்சாரி	0	4	0
ருஷியா ஜப்பான் யுத்தம்	0	4	0
வியாசர்விபரீதம்	0	4	0
கண்கட்டுவித்தை 1000	0	10	0
நாரதர்கலகம்	0	6	0
ஷை 2-ம் பாகம்	0	4	0
தெய்வகுணவெளிச்சம்	0	8	0
இந்தியா சமையல் சாஸ்திரம்	0	8	0
நூதன கலியாணப்பாட்டு	0	4	0
போலீசு ஆக்ட்டு	0	4	0
தேவஸ்தான ஆக்ட்டு	0	4	0
ஸ்டாம்பு ஆக்ட்டு	0	8	0
8-வது ஆக்ட்டு	0	8	0
சாட்சி ஆக்ட்டு	0	12	0
தஸ்தாவேஜு ஆக்ட்டு	1	4	0
இந்தியன்பினல்கோட்டு	3	0	0
கிராம முனிசிப் கோர்ட்டு	3	0	0
இந்துலா	2	0	0

இப்படிக்கு.

சி. முனிசாமி முதலியார் கம்பெனி.,

பெரம்பூர் பாரெக்ஸ் போஸ்டு, மதராஸ்.

உ

கடவுள் துணை.

யோகமுநி

வயித்தியக்கண்ணாடி

இரண்டாம்பாகம்.

வியாதிவருங்காரணம்.

ஆமப்பா மனிதர்செய்த கருமத்தாலே
அரகரா மேகமென்ற ராஜாவாலே
காமத்தால் விசனத்தால் பொசிப்பினாலே
கன்னியரை மிச்சமாய் புணர்வதாலே
போமப்பா நடையாலே கொலைகளாலே
பொழுதிரவு தெரியாத நித்திரையாலே
நாமப்பா கண்டகண்ட வியாதிவந்து
நலிவோர்க்கு கைமுறையை நன்றாய்க்கேளே. (க)

திருஷ்டாந்தங்கூறல்.

கேளடா காமத்தால் கெட்டோர்கோடி கிளர்கின்ற கோபத்தால் கெட்டார்கோடி நாளடா ஆணுவத்தால் கெட்டார்கோடி நலமானதீயினால் மாய்ந்தார்கோடி வேளடா தோஷத்தால் வீழ்ந்தார்கோடி வீணனக்கொலைசெய்து செத்தார்கோடி பாட்டர் நானென்றகெருவந்தள்ளி பண்பானவாகடத்தின் பயனைப்பாரே. ()

சில வயித்தியர்கள் செய்கை.

வாகடத்தின் பயனறியார்நாடிகாணார்வளர்கையைப்பிடித்திழுத்துவார்த்தைசொல்வார் ஆகடியமாகவே நல்லோர்தம்மை அசத்திய நோய்வந்ததென்பார் ஐயோவென்பார் பேர்கிடக்கப்பேர் சொல்வார் வியாதிகட்கு பிணிதீர்ப்போ மென்றுசொல்வார் தீர்க்கமாட்டார் ஒகோகோவயித்தியர்நா னென்றுசொல்வார் ஒருகாலுமோட்ச மில்லைநரகந்தானே. (உ)

பதினெண்பேர் சாஸ்த்திரத்தை திரட்டியானும் பதிப்பித்தேன் கண்ணாடிபோலேமைந்தா விதிபறியாவயித்தியனை விரும்பவேண்டாம் வீணரிடம் கைகாட்டி விழிக்கவேண்டாம் ததியரியான் குறியறியான் கையைப்பார்ப்பான் தன்வாயில் வந்தபடிவார்த்தை சொல்வான் சதியாளன் பணங்கொடுத்தால் மருந்தையீவான் சண்டாளன் மறுபடியும் வாரேனென்பான். (ச)

பித்தசுரத்துக்குக் கியாழம்.

கண்டுபார் பித்தசுரம்-பித்தவெட்டை கலங்காத அஸ்திசுரம் காணாதோடும் கொண்டுப்பார் பேய்ப்புடலுங் கிராம்புசுக்கு கோரையாங்கிழங்குடனே நிலவேம்புமல்லி தண்டுமிண்டாய்செய்யாதே சமனாய்சேர்த்து சர்தகமாய்நீர்வார்த்துஎட்டொன்றாக்கி உண்டிடவேசொன்னதொரு சுரங்களெல்லாம் ஓடுமடாகதிர்கண்டபனிபோல்தானே. (ரு)

சகலசுரத்திற்கும் கியாழம்.

தானென்றசகலசுரம் தீருதற்குசாற்றுகிறேனின்ன மொருவகையைக்கேளு வானென்ற வில்வவேர் விலாமிச்சம்வேர் வண்ணெரிஞ்சி நன்னாரி மதுரம்சோம்பு கோரனென்ற விளாம்வோடு முத்தக்காசுகுலவு முந்திரிப்பழம் நெல்பொறியினோடே வீரனென்ற நெல்விமுள்ளி யிலுப்பைப்பூவும் மணலுடனே சுக்கிவைகள் சமமாய்க்கொண்டே. (சு)

கொண்டேதானீர்விட்டுக் கியாழந்தன்னை கூர்மையுடன் எட்டொன்றுப் குறுகக்காச்சி உண்டிடவே தாபசுரம்மயக்கந்தூக்கம் வொழியாதபித்தசுரம்காவரட்சி அண்டாது ஐயர்மே லாணைகண்டீர் அடல்பெரியகுருவின்மே லாணைகண்டீர் திண்டோளி ரெந்தன்மே லாணைகண்டீர் தேசத்துமானிடரே செய்துபாரீர். (எ)

சேத்தும சுரத்துக்குக் கியாழமும் அதற்கு
பத்தியமும்கஞ்சியும்.

முறைமையென்ற தூதுவளை கண்டங்கத்திரி முயன்றதொரு செம்முள்ளி சுண்டைவேறும் வறுமையென்றசுக்குடனேகியாழம் பண்ணி வகையான திப்பிலிதூள் போட்டுஉண்டால் அருமையென்ற சேத்மசுரந்தீருந்தீரும் அதற்குடனே பத்தியந்தான் கஞ்சிகேளு திரமானவில்வயிலைபாதிரிப்பூ திராக்ஷபழம் பெருங்குமிழிவேறாலும் ஒருபடிஜெலத்திலரைப் படியாய்க்காச்சி உழக்கரிசிவருத்ததிலே போட்டுக்கிண்டி பருவமாய் காச்சி பத்தியமே தர்தால்பரக்குமடா சேத்மசுரம்பஞ்சுபோலே. (அ)

பித்தத்தினால் உதடு நாக்கு முதலான வெடிப்புக்கு.

பாரேநீபித்தவெடி வந்துதானால் பாங்கான * மருதுடைய யிலையைவாங்கி சேரேநீபசும்பாலில் ஊரவைத்து சிறப்பாக மூன்றுநாள் குடிக்கச்சொல்லு வீரேநீபத்தியந்தான் பாலுஞ்சோறும் விதமாக ஏழுநாள் நீரைவாரு பேரேநீபோகருட கடாக்ஷத்தாலேபேதமில்லை புலிப்பாணி பாடினேனே. (௯)

* மறுதுடையபிலை மருமாங்காயிலை.

எலிகடி விஷத்-க்கும் மருந்து.

பாரோநீ யின்னமொன்று சொல்லக்கேளு பதினெட்டுயெலி கடிக் குமருந்தையப்பா வீரோநீகரும்பூனை மலத்தைவாங்கிவிதமாக கெச்சக்காயளவுதானும் கூரோநீ பனைவெல்லக் கட்டியப்பா குணமாக அவ்வளவுகூடச்சேர்த்து சேரோநீ மூன்றுநா ளாறுவேளை செயலாகக்கொண்டிடவே தீரும்பாரோ. (௧௦)

அதற்குப் பத்தியம்.

பாரப்பா ஆறுநாள் பத்தியமேகாறு பண்பான உப்புமுதலொன்றுமாகா வீரப்பா ஏழுநாள் தலைமுழுக்கு விதமாக உப்பிட்ட பருப்புமாகும் சேரப்பா எட்டானாளெல்லாங்கூட்டு செயலாகநாட்சென்றால் சொல்லக்கேளு கூரப்பா மூன்றுகெடு கொண்டாயானால் குணமாகயெலிகடிகள் தீருந்தானே. (௧௧)

நரிநாய்க்கடிக்கு மருந்தும் பத்தியமும்.

தானென்ற பேய்நரிநாய் கடித்துதானால் தழைத்தமணித்தக் காளியிலைச்சாரப்பா பானென்றபடிக்கால்தான் கொடுப்பாயப்பா பாங்காக மூன்றுநாளாறுவேளை கோனென்ற பத்தியந்தானுப்பாகாதுகுணமாகும் ஏழுநாள்நீரைவாருவெனென்றபேய்நரிநாய் கடிதான்தீரும் விதமாகு மிதின் தழையை மேலேபூசு. (௧௨)

பூனைகடிக்கு மருந்து மேற்கூறியபடியே பத்தியம்.

பூசியே பூனைதான் கடித்துதானால் புனிதமுள்ள* பூனைதொழும்பட்டைவாங்கி ஆசியே பசுவின்பால் தனிலரைத்து அப்பனே பத்தியமாய் குடிக்கச்சொல்லு கூசியே முன்போல பத்தியமேகாரு மணமுள்ளநீலிவேர் தனையரைத்து வாசியே யிராதுகாலும் பூசு வகையா கப்பூனைகடி தீருந்தானே. (௧௩)

* பூனைதொழும்பட்டை குப்பைமேனிபட்டை.

நூறாண்டின் வேப்பம்பட்டை.

போமப்பா யிதுகடந்து பின்புநீதான் புகழ்பெறவே நூறாண்டின்வேம்பைப்பார்த்து ஆமப்பா பட்டைதனை வெட்டிவந்து அப்பனே நிழலுலர்த்தா யுலர்த்திப்பின்பு காமப்பா யிடித்து நன்றாய் சூரணமேசெய்து கறிச்சாலை மல்லிகையின்சாற்றாலாட்டி தேமப்பாயேழுதிரம் திரமாய்ச்செய்து சிறப்பாக ஒருகடிதான் கொண்டிடாயே. (கச)

(வ-ம்) கரிச்சாலைபின்சாறும் மல்லிகைப்பூச்சாறும் சரிபாகமாய்விட்டு அறைத்து பில்லைதட்டி நிழலில் வைக்கவும் உலந்தபின்பு முன்போலவே சாறுவிட்டு அறைத்து நிழலில் உலர்த்தவும் இப்படி ஏழுதிரம்செய்து குறுஞ்சித்தேனில் குழைத்து நாற்பது நாளுண்ணவும், (கரு)

கொண்டிடவே அனுபானம் வகையைக்கேளு குறிஞ்சித்தேன் தனில்குழைத்து நாற்பதுநாளுண்ணு விண்டிடவே அந்திசந்திதனை வாய்க்கொள்ளுமேனியெல்லாங் கருங்காலிவைரமாகும் துண்டிடவே நறைதிறைகளெல்லாமாறும் சுக்கிலந்தான் வேலிருக்கும் கிழோடாது கண்டிடவே ஆறுதலம் வெளியாய்க்காணும் காலனுமே அஞ்சிடுவான் காணுகாணே. (கசு)

சிந்தில்பஸ்பம்.

தானென்ற பொற்சிந்தி யானால்நன்று சாதகமாய் சிகப்புநன்று கிடையாவிட்டால் பானென்ற நற்சிந்தி மேல்தோல்போக்கி பருத்துண்டாய்க் கொண்டுவந்து நரிக்கிக்கொண்டு கோனென்ற நிழலுலர்த்தி சூரணமாய்செய்து கூரான * கற்கண்டு சமபாகஞ் சேர்த்துவேனென்ற ஒருகடிதானந்திசந்தி வெருளாமல் மண்டலமே உண்ணுபாரே. (கஎ)

* கற்கண்டு பனங் கற்கண்டு.

பாரப்பா மேகமென்ற தெல்லாம்போகும்பரிவானவாதபித்தம்பரந்தேயோடும் சேமப்பா கபாலத்தின் வெட்டைபோகும் ஜெகமறிந்த அஸ்திசுரம் விட்டேயோடும் தாமப்பா தாதுவிர்த்தி தழைக்குந்தேகம் சதிரான ஆறுதலம் வன்னிமீறும் சாரப்பாசிந்திக்குசாகோயில்லை சாஸ்திரத்தைப் பொய்யென்று சாகாதேநீ,

சிகப்புக்கத்தாழை.

கொள்ளவே சிகப்புக் கத்தாழைதன்னை கொண்டந்திசந்தி மண்டலமேயுண்ணு விள்ளவே திரேகமதில் கஸ்தூரிவீசம் வேர்வைதான் தேகத்தில்கசியாதப்பா துள்ளவேநறைதிறைகளெல்லா

மாறும் சோம்பலென்ற கொட்டாவி நித்திரையுமில்லை கள்ளவே யிந்திரியம் உடம்பிலாறும் கண்களுமே செவ்வலரிப் பூப்போலாமே. (கக)

(வ-ம்) சோத்துக்கத்தா.தழையில் சிகப்புக் கொண்டுவந்து மேல்தோல்சீவி நடுச்சோற்றை ஏழுதரம் ஜெலத்தி லலம்பிபனங் கற்கண்டுபோட்டு பிசரி தலைமாட்டில் வைத்துக்கொண்டு மூனு ஜாமம் சாப்பிடவும் கண்குளிரும் மேகம்யெடுக்கும் தேகம் பசுமையாகும் சோம்ப லென்பதேயில்லை ச0-நாள் சாப்பிடவும். ()

மலஜலங்கட்டினால் மருந்து.

மங்காதகுழன்மடவீர் சொல்லக்கேளீர் வாயுவினால் சிற்றின் பமதிகமானால் தங்கினின்ற விருவாயுங் கட்டிக்கொள்ளுந் தாரணியில் மானிடர்கள் சகிக்கமாட்டார் வெண்காரஞ் சவக்காரஞ்சினைக்காரம் வெண்மதியாமிந்துப்பு வெதுப்பிக்கொண்டு சிங்காரவினீரில் கொள்வீராகில்சிக்காது மலசலங்கள் திண்ணந்தானே.

சிறுபிள்ளைகள்வளர கைமுறைகள்.

தானென்ற தோராதபிள்ளைகட்கு தயவாகச்சொல்லுகிறேன் தண்ணீர்மிட்டான் மானென்றசாரு வெண்மறிவின்பாலும் மைந்தனே ஆவின்பால் தேங்காய்ப்பாலுந் தேனென்றஆவ்நெய்திரமாய்வாங்கிதே சிகனேவகைவகைக்குப் படிகாலப்பா கோனென்ற சீனியது கற்கண்டோடு கொற்றவனே பலமைந்து கொண்டு சேரே. (உஉ)

* வெண்மறி வெள்ளாடு.

சேர்த்தபின்பு அடுப்பேற்றிதீயைமூட்டு சிறுகயெரிமெழுகு பதஞ் சிவக்கும்போது கோத்தெடுத்து வடிகட்டிக்கொண்டு தானும் கொற்றவனே கரண்டிவீதங்கொடுத்தாயானால் கார்த்திருந்த கணம்நீங்கி கரும்புபோலாம் கட்டழகும்பிள்ளைக்கு * களையுமுண்டாம் பூத்தமறை போகருடகடாட்சத்தாலே புலிப்பாணி புவிதனிலேபுகட்டினேனே. (உங)

* களை அழகு.

குழந்தைகள் சிரங்குக்கு.

அரையுரேனின்னமொரு யெண்ணெயப்பா அனல்மீறிகுழந்தைகட்கு அங்கமெல்லாம்நிறையவேசொரிசிறங்கு நின்றதானால் நிலவரமாயாமணக் கெண்ணெயோடு மனாயானமேனியுடன் மணத்தக்காளிமைந்தனே முடக்கற்றான் வகைப்படிக்கால் குறையாமல் மூக்குரட்டைய ரைத்தசாந்து கூட்டிவாய் எழுமிச்சம்பழத் தின்வாரே. (உச)

வாறுகக்காய்ச்சிவடித் தெடுத்துக்கொண்ட வகையாகக் கரண்டி முறைகொடுப்பாயப்பா நேராகப் பத்தியந்தா னிச்சாபத்தியம் நிச்சயமாயைந்து நாளேழுநாளாம் சிராகத்தலைமுழுகிவருவாராகில் சிறுசிரங்கும் பெருஞ்சிரங்கு மில்லாதோடும் பேராகபோகருட கடாக்ஷத்தாலே பேசினேன் புலிப்பாணிபேசினேனே. (௨௫)

பிள்ளைபெறமாட்டாதவர்க்கு.

பாடியேபிள்ளைவெளி காணுதபேர்க்கு பண்பானகிழ்க்காய் நெல்லிமூலம் வாடியேபோகாமல் வளையவாட்டி வசமாக இடக்கால் பெருவிரலில்போட நீடியேபிள்ளை வெளிகாணுமப்பா நினைவாக இன்னமொருவேரைக்கேளு சூடியேமின்னவேர் தனையெடுத்து சுரபியெனும் பசுவின்பால் தனிலரைத்தே. (௨௬)

அரைத்தெடுத்து உள்ளுக்குக்கொடுத்தால் பிள்ளை அப்பனே கீழ்விழுந்து அழுகும்பாரு மறைத்தபொருளென்று நீமயங்கவேண்டாம் மகாகோடிபுண்ணியங்க ளுனக்குண்டாகும் துரைத்தனமா நீ யலைந்து திரியவேண்டாம் துய்யமெனும் நூல்களெல்லாம் துணிந்துபாரு உரைத்தகுரு போகருடகடாக்ஷத்தாலே உரைத்திட்டேன் புலிப்பாணியுலகில்தானே. (௨௭)

அக்கினிமந்தத்திற்கு லேக்கியம்.

தானேதான் திரிகடுகு ஓமம்வாய்விளங்கந் தயவாகவகைவகைக்குவிராகனைந்து போனென்ற பொடிப்பண்ணி சக்கரைநேர் சேர்த்து பொங்கியதேன் படிக்கால்நெய்ப்படிகால்வார்த்து கோனென்றுபிசைந்ததிலே வைத்துக்கொண்டு குணமாக நெல்லிக்காயளவுகொள்ள வானென்ற வாயுஅக்கினியுமந்தம் வாங்குமடா போகருடகடாக்ஷந்தானே. (௨௮)

சூட்டுக்கு முழுக தாமரைத்தயிலம்.

தானானவெள்ளெண்ணெய் படிதானென்று தகைமைகுளிர்த் தாமரைச்சார் படிதானென்று மானானபதந்தனிலே காய்ச்சியப் பாபக்குவ மாய்க்கீழிறக்கித் தானேவைத்து மானுகுபூலாக்கிழங்குப் பச்சிலையிலப்பா வகைவகைக்கு விராகனைந்து நிறுத்துக்கொண்டு தேனுகப்பொடிப்பண்ணித் தூவிப்போடு தெளிவாகவடித்திறுத்து முழுகுவாயே. (௨௯)

முழுகையிலே சூடெல்லாந் தணிந்துபோகு முன்னிலையா கண்ணெரிவு குளிர்ச்சியாகும் புழுகாது திரேகமது பொன்போல் மின்னும்பண்பானநீர்கடுப்புவினையுந்தீரும் அழுகாதுவிந்துவிந்தே

இருக்கும்பாரு அட்டவாசமூலத்திற் சூடும்போகும், கழுகாது சூலையுட கருணைவாங்கும் நலமானபோகருட கடாக்ஷந்தானே.

சகலரோகத்திற்குச் சித்திரமூல எண்ணெய்.

ஆருதகூட்டுக்கு எண்ணெய்சொல்வேன் அட்டவாகளள்ளே ண்ணை ஆவின்நெய்யும், கூறுகவகைவகைக்குப் படிதான்பாதி கொடிதான சித்தருட * மூலப்பட்டை நேராகப்பலமொன்று நீர்விட்டாட்டி நேராகஎண்ணெயிலே கலக்கிப்போட்டு, மீறுத மெழுகுபதந் தனிலிறக்கி மிஞ்சாமல் துட்டெடைதான் கொண்டுபோரே. ௨௯

* மூலப்பட்டை சித்திரமூலப்பட்டை.

பாரேநீநாற்பதுநாள் கொண்டபோது பாங்கான சூடெங்கே மேகமெங்கே, வீரேநீ விப்புருதிகண்டமாலை விதமானபுண்புறைகள் சிறங்குந்தீரும், தீரேநீவாயுவொடுசூலை குத்துதிறமான செங்கிரந்தித்தடிப்புமாறும், சேரேநீபத்தியந்தா னிதற்கோயில் லைசெயலான போகருடகடாக்ஷந்தானே. ௩0

வயிற்றிரைச்சல் பேதிக்கு.

சேரேனீ யின்னமொன்று சொல்லக்கேளு செயலானமிளகுபல மிரண்டுவாங்கி, நேரேநீ வேலியுடபருத்திச்சாறு நிறையவிட்டு ஊறவைத்து வுலறப்போடு, கூறேநீவறுத்துமிகப் பொடியாச்செய்து கொற்றவனே வெருகடியாய்த் தேனிற்கொள்ள, வீரேநீ வயிற்றிரைச்சல் பேதிநிற்கும் விதமாகப்பொருமலுடன் வாயுபோமே, ௩௧

வயிற்றிரைச்சல்-இரத்தக்கடுப்புக்கு.

போமேனீயின்னமொன்று சொல்லக்கேளு பொலிவாகனீர்ப்பூண்டு பலந்தான்ரண்டு, ஆமேனீயெழுத்தாணி யிலையைத்தானும் அட்டவாகரண்டுபல மெடுத்துக்கொண்டு தாமேநீநெய்தனிலே வதக்கிமைந்தாதய வானயேல மதுவிராகனென்று, வாமேநீ சீனிபலமொன்று கூட்டிவகையாகத் தானரைத்து எடுத்துகொள்ளே. ௩௨

கொள்ளப்பாமுள்ளுக்காய் விதமாக கொற்றவனே மூன்றுநாளாறுவேளை, தெள்ளப்பாவயிற்றிரைச்சல் கடுப்புரத்தந்தெளிவில்லா மூலமதின் சூடுந்தீரும், அள்ளப்பாபத் தியந்தானித்தற்கோயில்லையனே தயிர்பாலும் நெய்யுங்கூட்டு விள்ளப்பாபோகருடகடாட்சத்தாலே வித்தாகப் புலிப்பாணி பாடினேனே,

முளைமூலத்துக்கு கட்டு.

பாடினேனின்னமொன்று சொல்லக்கேளு பண்பானகோவையுட இலையைக்கட்டி, நாடினேன் கம்பஞ்சோ றுக்கிபின்னை நலமாகத்தானுருட்டி நீரைவாரு, கூறுகிறேனெட்டுநாள் கடந்த சோறு கொற்றவனே முன்னிலையுமெடையாய்ச்சேர்த்து ஆடுறே ஆறுநாள் கட்டும்போது அடியோடேமுளை மூலமகன்றுபோமே.

வல்லாரை மூலிகை.

சூக்ஷமாம் வல்லாரை கொண்டுவந்து சுகமாக மிளகுள்ளி வொக்கச்சேர்த்து, சூக்ஷமாமென்று தின்னக்காலமேதான் சுளு வாகவாய்க்கசப்புவாய்னீராதல், சூட்சமாயிவையெல்லாம் போகும்பாரு சொன்னதொருபச்சிலைதான், பொய்யாதப்பா சூட்சமாய் வயித்தியர்களறியாரிந்நூல் சொல்லுதற்கு நாவுண்டோ மெய்யாம்பாரே. ௩௫

பூரான்கடிதீர.

பாரப்பா பூரான்தான் கடித்தபேர்க்குப் பண்பான எருக்கம்பூநரம்பைப்போக்கிச், சீராகப்பூவேழு கொடுத்துப்பாருசிறப்பாக * ஞாளிமலம் புகையைக்காட்டு, கூறப்பாநாட்சென்றால் மண்டலங்கொள்குணமாகப் பத்தியந்தானில்லைப்பாரு, வீரப்பா பூரான்தான் தடிப்புமாறும்விதமாக அதின்விடமும் தீருந் தானே. ௩௬

* ஞாளிமலம்யென்றால் நாய்மலம்.

செய்யான் பெருச்சாளிகடிக்கும்.

தானென்ற செய்யான்தான் கடித்தபேர்க்கு தயவாகக் கொல்லனுடக் கோவைமூலம், பானென்றபாக்களவு கொள்ளச்சொல்லு பண்பான * மயிற்பீலிபுகையைப்போடு, கோனென்ற செய்யான் தன்விஷமும் போகுங் குணமான பெருச்சாளி கடிதான் தீரவேனென்றஅறுகம்வேர்வெள்ளிதன்னில்விதமாகக்குடித்தவுடன் தீர்ந்துபோமே. ௩௭

* மயில்பீலியென்றால்-மயிலிறகு.

தேள்காலிவிஷந்தீர மூலிகை.

போமப்பா தேள்காலி கடித்தபேர்க்குப் பொங்கமுடன் பெரிய நங்கைவேரைத்தானும், வாமப்பாநீரிலே உரைத்துப்பூசவளமாக * மட்டிப்பால் புகையைப்போடு, ஆமப்பா கடுகடுப்பு அடங்கிப்போகும் அப்பனே தேள்காலிவிஷமுந்தீரும்நாமப்பா போகருடகடாட்சத்தாலே நலமாகப்புலிப்பாணி பாடினேனே.

* மட்டிப்பால்என்றால்-சாம்பிராணி.

சகல விஷங்களுந்தீர மருந்து.

பாடியதோர் விஷங்களெல்லாந் தீரவேதான் பண்பாக எட்டிபழந்தன்னைவாங்கி, கூடியதோர் சட்டியிலே வேணமட்டுங்குணமாகத்தானெடுத்து வேப்பெண்ணெவிட்டு, நாடியே அடுப்பேற்றி வேகவைத்து நலமாக உருட்டியதைச் செப்பில்மூடி தூண்டியே விஷந்தீண்டி வந்தபேர்க்கு தூதுவளங்காயளவு கொத்திடாயே. ௩௯

சிறுபாம்புகடிக்கு மருந்து.

போடப்பா சிறுபாம்பு கடித்தபேர்க்குப் பொங்கமுடன் சிறுகுறிஞ்சான் வேரைவாங்கி, நாடப்பா வெந்நீராலரைத்துக் கொண்டுநலமான ஏழுநாள் சலத்தைவாரு, சாடப்பாசிறுபாம்பு தடிப்புமாறுஞ் சார்பாகபோகருட கடாக்ஷந்தானே. ௪0

விதவையைக்கூடப் பிள்ளையில்லாதிருக்க.

தானப்பாகன்னியர்கள் விதவைக்கூடித் தான்தழுவவேணுமென்றால் சொல்லக்கேளு மானப்பா தலைமுழுகும் * பக்கந்தன்னில் மைந்தனே புணர்ந்திடவே கெர்ப்பமில்லை வீணப்பா இதுவறிய மாட்டாமல் தான் விதமாகக் குலைகள்வந்து நேரும்பாரு ஊணப்பா இதுவல்லோ பாவம்பாவம் உத்தமனே அறிவாலே அறிந்துகொள்ளே, ௪௧

* பக்கம் வீட்டுக்குத்தூரமாகியபட்சத்தில் நாள்முன்பாகசேற.

வேறு-பித்தவாந்திக்குக்கியாழம்.

கொத்தமல்லிக்*கூவிளங் குறுந்தமுட்டிநெற்பொரி
ஒத்தசுக்குமுத்தமோ டுருத்தநீருழக்கதாய்
கத்ததிண்டிசர்க்கரைக் கலந்துடன் குடிப்பிராய்
சத்தியென்றுதோர்க்குமோ தவிர்க்கலாகுமென்பரே. ௪௨

* கூவிளம்—வில்வம்

விக்கலுக்கு.

சுட்டுதிப்பிலி யீரைந்துசீரகம்
கட்டுதேனில் கலந்துண்ணவிக்கலும்
விட்டுப்போடும் விடாவிடில்பொஸ்தகம்
கட்டுப்போடுநான் தேறனுமல்லவே. ௪௩

மயிர்முளைக்கத் தயிலம்.

காருநாய்கரிச் சான்பட்டையார்பலம்
பாருபேருறையாள்பலம் * வெள்ளுள்ளி *மயிர்மாணிக்கம்

சேருவாய்பழஞ் சேர்த்துநறுக்கியே
ஏருவாய்நாழி யெள்ளெண்ணெயூற்றிடே. சச

ஊர்த்திடுங் கதிரோன்புடமேனிதம
போர்த்திடுமிரு போதுமோரேழுநாள்
சேர்த்திடில்மயிர் சேரமுளைத்திடும்
மோத்திடும்பத்திய மில்லைக்கார்த்திடே. சரு

மன்மதக்குழம்பு.

ஏர்நில்ப்பனை யின்கிழங்கோர்பலம்
தேர்தண்ணீரு விட்டான்கிழங்கோர்பலம்
தேர்நெரிச்சிவேர் சேர்த்திட்டொருபலம்
பார்வர்த்தாவின் பாலுழக்கூட்டிடே. சசு

கூட்டுமோனக் குழம்புகொதித்துடன்
மூட்டுனித்தம் முணைந்துகுடித்திடில்
காட்டுவீரியங் கைகண்டதிம்முறை
மாட்டுலக்கையா மல்குலிற்கண்டிடே. சஎ

முழங்கால்வாதம்.

செப்புவேன் முழங்காலின் வாதங்கண்டால்
ஒப்பும்வீழிப் பிண்ணாக்குடனுவாரை
தப்பும்வெள்ளுள்ளி தாக்கும்விளக்கெண்ணை
ஒப்புமூன்றுமே வேதிட்டுக்கட்டிடே. சஅ

வாந்திபேதிக்குச் சூரணம்.

தேறவேயின்னமொருசூரணங்கேள்திறமானஎட்டியுடவடவேர்வாங்கி கூடவேமேல்தோலைப் பழச்சாற்றுலாட்டி, குணமாக ரவியுலர்த்திச் சூரணமேசெய்து மீறவே பதனமாய்வைத்துக் கொண்டு மேன்மையுடன் புரமெரித்தார் தும்பைரண்டும் ஏழ வேகியாழுமிட்டுச் சூரணந்தான் இன்பமுடன் கடலையிடையிட்டுக்கொள்ளே. சகூ

கொள்ளவே சுகபேதி தீருமப்பா குணமாகமீறியது பேதியானால்விள்ளவே மறுப்டியுங் கிஷாயத்தில்தாக்கு மீறுகிறவாந்தியொடு பேதிதீரும் உள்ளவேகாதடைப்பு சந்நிவேர்வை உத்தமனேதீருமடா மூன்றுவிசையீய வள்ளவேவறுத்தரிசி கஞ்சிகொள்ளு மைந்தனே ஊழியதுபறக்கும்பாரே. ருo

குழந்தைகட்கு வாந்திகண்டால்.

பூட்டுகிறேன் குழந்தைகட்கு வாந்திகண்டால் பூவென்ற கிராம்பதிவிடையிந்திப்பிலி நாட்டுகிறேன் சுட்டசாம்பல் நன்றாகப் பொடிசெய்து தேனிற்சேர்த்து ஊட்டவேவாந்தியது ஒழிந்துபோகும் உண்மையிதுதவறாது உறுதிமெத்த ஆட்டமிகும் போகருட கடாக்ஷத்தாலே அப்பனே புலிப்பாணிபாடினேனே.

கற்றாழைநாற்றந்தீரக்கூட்டு.

உலகினிலே மானிடர்க்கு கற்றாழைநாற்றம் ஓடிவிடசாற்றொன்று உரைக்கச்கேளு, * நல்நாரி கரந்தையுடவேறுங்கூட நன்னாரி வேருடனேமுத்தக்காசுங் குலமிலகுங்கஸ்தூரி மஞ்சள் தானுங் கூட்டியே வகைவகைக்கு விராகனைந்து கலக்கமில்லையரைத்ததனை முதட்டில்பூசக் கண்டோடுங்கற்றாழை நாற்றமெண்ணே. ௫௨.

* நல்நாரி-சிவக்கரந்தை.

பிளாஸ்திரி.

பாடுகிறேனின்னமொரு பிளாஸ்திரிகேளுபாங்கானவிளாம்பிசினுங் கருங்குங்கிலியம் நாடுகிறேன் சமன்கொண்டுவருகும் போது நலமானவிளக்கெண்ணை கூடவிட்டுஆடுகிறேன்வடிகட்டி கலசந்தன்னில் அடவாகத்தானடைத்துத் துணியில்பூசி சூடுகிறேன் ரணங்கள்மேல்ப் போடஆறும் சுகமாக அனல்காட்டிப் போட்டிடாயே. ௫௩.

வேறுமுறை-பிளாஸ்திரி.

போட்டிடவே யின்னமொரு பிளாஸ்திரி சொல்வேன் புகழ்பெரிய *மரத்துவெள்ளைப் பலந்தானைந்து கூட்டிடுவாய் பூரவிடை விராகனைந்து கூட்டியேதானரைத்து பொடியாகச்செய்து மாட்டிடுவாய்தென்னங்காய் யெண்ணையாலே மைந்தனே தானரைத்துத் தண்ணீர்விட்டு, ஆட்டிடுவாய்த் * தவளம்போலாகுமட்டும் அப்பனே புண்மேலே போடப்போமே, ௫௪

* மரத்துவெள்ளை-வெள்ளைகுங்கிலியம். * தவளம்-வெள்ளை.

உ

கடவுள் துணை.

தாதுபுஷ்டிக்கி

மன்மதலேக்கியம்.

லேக்கியங்கேளாண்டே - மன்மத - லேக்கியங் கூறுகிறேன்
வாக்கியமாய் தாக்கிடும்நோய்களெல்லாம் - தாது - புஷ்டியுடன்
யிந்திரியக்கட்டு முண்டாம் பூவகைமுறையாண்டே - இதை புசி
க்கத் துணிந்தவனே காமியாண்டே தாவியமலைமுனிக்கு - சற்கு
ருவாம்-சண்முக மளித்தமுறை இதுஆண்டே தென்னம்பூ பன
ம்பூவாம்-தேரின - செண்பகப்பூ கடுக்காப்பூ சிறுநாகப்பூ மாம்பூ
வசம்பு கிரும்புகாமப்பு கஞ்சாப்பூ வில்லுவப்பூ சரிச்சாலைப்பூ
கண்டங்கத்திரியின்பூவு-காட்டு அத்திப்பூக் கருவேலன் மரத்து
ப்பூவாம் நெல்லிப்பு நீர்முள்ளிப்பூ நெரிஞ்சிப்பூ மல்லிகைப்பு
மர்துளம்பூ மருக்காளைப்பூ ரோஜாப்பு குங்குமப்பூ - சூரிய-காந்
திப்பூஆவாரம்பூ அமுக்கிருப்பூ புங்கம்பூ வேப்பம்பூ-பொற்கரை
யான்-பூவுடனே தாமரைபூ தூதுளம்பூவாம்கொத்தமல்லி துளசி
விரை-நீர் முள்ளிவிரை சப்ஜாவிரை கசகசாவாம் ஜாதிக்காய்
வால்மிளகு-பூனைக்-காலிவிரை நாயுருவி யரசம்பட்டை மயிர்மா
ணிக்கமுடனே-சாலாம்-பிசினிநன்னாரிவேர் அதிமதுரம் ஆலம்
விழுது துளிர்-சுக்கு-ஆகியதினுசுகள் வகைவகைக்கும் ஒவ்வொ
ருபலமெடுத்து நன்ருய்-உலர்த்தியிடித்து சிறுதூளாக்கி சீலையில்
வடிதாக்கி-மறுபடியுமிடித்தெடுக்க வசமாண்டே. தந்தின

பாலொருபடியாண்டே - பசும் பாலென அளந்து மண்பா
ண்டத்திலே வார்த்தடுப்பேற்ருண்டே-நல்ல வகையாம்ஒருவித
விரகாலே யெறியொருநாழியாண்டே - முன்னே -யிடித்து வை
த்திருக்குஞ் சஞ்சீவியை மதலையீனுதமடவாம் - நல்ல - மங்கி
லிய ஸ்ரீயிடத்தி லதைக்கொடுத்து தூவிக்கொண்டிருக்கையிலே
நீ-துரைத்தனஞ்செய்யாமல் கிளராண்டே சஞ்சீவிமுடிந்தவுடன்
நல்ல-சாரபருப்புகால்படியாண்டே வாதுமைபருப்புழக்கு-நல்ல
திராக்ஷபழத்திலஞ்சு பலந்தாக்கு பேரீச்சம்பழஞ்சேர்த்து இந்த

நாலும் புகட்டிநன்றாய்க்கிளறு செவ்விளநீர்வாரு-கால்படி- சேர்த்தபின் சீனியைந்துபலம்போடு பசுநெய்சேர்த்தாடு-பணங்-கற்கண்டு அதுவே யிடைஜாடு தேனில் உழக்குத்தேடு - ஆண்டே தீர்ந்ததுலேகியம் இனிகேளு அடிபிடிக்காமல்ஜாடு - ஆண்டே அடுப்பைவிட்டிறக்கிமேல்மூடு.

தந்தினத் தனதனனம்-தன்னனம்
தந்தினத் தந்தின தனதனனம்

விருத்தம்.

மன்மதனார்லேக்கியந்தான் முடிந்துதாண்டே
  மண்டலத்திலிதன்பெருமை யென்னசொல்வேன்
பொன்போலேதிரேகமது வீசுமாண்டே
  பெண்களொருஆயிரமும் போறுதாண்டே
பின்தொடர்வார்மேல்விழுவார் பொருளேயீவார்
  பிலமிருக்குதென்றுமதி கெட்டிடாதே
கன்மமதுவனைச்சூழ்ந்து கழுதையாக்கும்
  கைதொடுத்தமனைவியின்றி புறம்போகாதே.

வசனம்.

இந்தலேக்கியம் சாப்பிடும்போது முதல் ஸ்நானம்செய்து மறுநாள் பேதிக்கிசாப்பிட்டு மைத்தானுள்முதல் லேக்கியத்தை புன்னைக் காயளவு சய - நாள் சாப்பிடவும் இந்த சய-நாளும் இச்சாபத்தியமாக யிருக்கவேணும் காலை மாலையும் பால் - நெய் தயிர் யிதுகளை சேர்த்துக்கொள்ளவும் எண்ணைகடுகுகூடாவாம் முக்கியமாய் ஸ்திரீபோகம் பொடி-சுருட்டு லாகிரி வஸ்துக்களை நினைக்கப்படாதாம்.

வயித்தியக்கண்ணாடி
முற்றுப்பெற்றது.

இதிலடங்கியிருக்கும் மருந்தின் அட்டவணை.

பித்தசுரத்துக்குக் கியாழம்
சகலசுரத்துக்கும் கியாழம்
சேத்துமசுரத்துக்கு கியாழம்
எலிகடி யிஅ-க்கும்மருந்து
நரிநாய்கடிக்கு மருந்து
பூனைகடிக்கு மருந்து
சிந்தில் பஸ்பம்
மலஜலங்கட்டினல்மருந்து
சிறுபிள்ளைகள்வளரகைமுறை
குழந்தைகள் சிரங்குக்கு
பிள்ளைபெறுதவர்களுக்குமரு
அக்கினிமந்தத்திற்கு லேகியம்
சூட்டுக்குமுழுகதாமரைத்தயி
சகலரோகத்திற்குசித்ரமூலயெ
வயிற்றிரைச்சல் பேதிக்கு
வயற்றிரைச்சல் இரத்தக்கடுப்
மூளைமூலத்துக்கு கட்டு
வல்லாரைமூலிகை பூரான்கடிதீர
செய்யான் பெருச்சாளிகடிக்கு
தேள்காலிவிஷந்தீர மூலிகை
சகலவிஷங்களுந்தீர மருந்து
சிறுபாம்புகடிக்கு [லாதிருக்க
விதவையைக்கூடப் பிள்ளையில்
பித்தவாந்திக்கு கியாழம்
விக்கலுக்கு
மயிர்முளைக்கத்தயிலம்
மன்மதக்குழம்பு
முழங்கால்வாதம்
வாந்திபேதிக்குச்சூரணம்
குழந்தைகட்குவாந்திகண்டால்
கற்றாழைநாற்றந்தீர
பிளாஸ்திரி
வேறுமுறை பிளாஸ்திரி
மன்மதலேகியம்